**14.11.2024**

**MCOP.No. 23/2022**

**ம.சா.1 : அண்ணாதுரை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் நான் வீட்டில் இருந்தேன். என் மனைவி எனக்கு தகவல் சொன்னார். மனைவிக்கு ஏரி வேலை செய்தவர்கள் தகவல் தெரிவித்தார்கள். என் மகன் TN30N0534 என்ற அரசு பேருந்தில் பயணியாக பயணம் செய்தார். விபத்து நடந்த இடம் கூடமலை பஸ் நிறுத்தத்திற்கும் சுமார் 70 அடி முன்பாக உள்ளது.

2) பஸ் நிறுத்தம் பக்கமாக இருந்ததால் பேருந்து மெதுவாக தான் வந்தது என்றும் என் மகன் தான் பஸ் நிறுத்தத்திற்கு முன்பாகவே அவசரமாகவே பேருந்தின் முன் படிக்கட்டியில் இருந்து திடீர் என்று கவனக்குறைவாக நடத்துனர் மற்றும் ஓட்டுநரிடம் தகவல் சொல்லாமல் இறங்கியததால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து முழுக்க முழுக்க என் மகனின் கவனக்குறைவால் தான் நேரிட்டது என்று சொன்னால் சரிய்ல்ல.

3) இந்த விபத்து அரசு பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அரசு பேருந்து ஓட்டுநரின் மீது நான் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் தான் அவர் மீது கெங்கவல்லி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் மகன் வேலைக்கு

செல்லவில்லை. படித்துக்கொண்டு இருந்தார். என் மகன் எங்கு படித்தார் என்ன வருடம் படித்தார் எந்த கல்லூரில் படித்தார் போன்ற விவரங்களை நான் மனுவிலோ ஆவணத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4) என் மகனினால் எனக்கு ஏற்பட்ட இழப்பு, வருமான இழப்பிற்கும், போக்குவரத்து செலவு போன்றவைகளுக்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் என் மகனின் இறப்பிற்கு இழப்பீடாக ரூ. 30 இலட்சம் மற்றும் வட்டியுடன் கோரியுள்ளது மிக அதிகமானது என்றால் சரியல்ல. இந்த இழப்பு என்னுடைய மகனின் அஜாகிரதை மற்றும் கவனக்குறைவால் அவரே பேருந்தில் இருந்து கீழே விழுந்து விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றும் இதற்கு எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகமோ ஓட்டுநரோ எவ்விதத்திலும் பொறுப்பு அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**